# மாதிரி வினாத் தாள்-1

## தமிழ் முதல் தாள்

*(செய்யுள் உரைநடை)*

**இரண்டு மதிப்பெண் விடைகள்:-**

### பகுதி – 1

21. தீய ஒழுக்கம் எக்காலத்திலும் ஒருவனுக்குத்துன்பத்தையே (இடும்பை) தரும்.
22. ஒருவன் தான் செய்யும் செயலைக்காலம் அறிந்து இடத்தோடு பொருந்துமாறு செய்தல். அவன் இவ்வுலகம் முழுவதையும் ஆளக் கருதினாலும் அது அவனுக்கு முடியும்.
23. குகன் விரைந்து வந்தான்: இராமனைத்தன் கண்களால் கண்டுகளித்தான். தனது இருள் போன்று கறுத்த தலைமுடி மண்ணில் படுமாறு தரையில் விழுந்து வணங்கினான் பின் எழுந்து வணங்கினான். உடலை வளைத்து வாயைக் கைகளால் பொத்தி அடக்கமாக நின்றான்.
24. செயற்கரிய செயல்களைச் செய்து பெருமைபெற்ற சிவனடியார்களின் வரலாற்றைக் கூறும் நூல். இது வழி நூலாகும். இதில் இருபெரும் காண்டங்களும் பதின்மூன்று சருக்கங்களும் 4286 பாடல்களும் உள்ளன. இந்நூல் இறைவனே ‘‘உலகெலாம்’’ என்று அடியெடுத்துக் கொடுக்கப்பெற்ற பெருமை உடையது. இலக்கிய நயங்களும் காவியச் சுவையும் அமைந்த ஒப்புயர்வற்ற சமூதாய நூலாயும் திகழ்கிறது.
25. அறிவு முதலிய வற்றால் தம்மைவிடப் பெரியவர்களைத் தமக்கு உற்றவராகக் கொண்டு அவர் சொற்படி நடத்தல் ஒருவருக்குத் தலை சிறந்த வலிமையாகும்.
26. நாற்கரணங்களாவன 1. மணம் 2. புத்தி 3. சித்தம் 4. அகங்காரம்
27. குலசேகரர் வடமொழி தென்மொழி ஆகிய இரண்டிலும் வல்லவர்.

### பகுதி – 2

28. தொல்காப்பியம் கூறும் எழுத்துப் பிறப்பு முறைகள் மொழி நூலாரையே வியப்பில் ஆழ்த்துகின்றன. இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது என்பார் முனைவர் எமினோ.
29. நடிகர் குரல் இனிமையாக இல்லாவிடில் மற்றொருவர் குரல் தரும்முறை கொண்டு வரப்பட்டது. அதேபோல் ஒருமொழிப் பாடத்தை மற்ற மொழிகளில் மாற்றி அமைக்கும் முறை தோன்றியது. இதனையே மொழிமாற்றம் என்பர்.
30. பண்டைக் காலத் தமிழர்களின் ஏற்றுமதி, இறக்குமதி ஆகியன குறித்துக் கூறும் நூல்கள் பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி ஆகியனவாகும்.

31. ஞாலம் என்னும் தமிழ்ச்சொல் ‘‘ஞால்’’ என்னும் சொல்லடியாகத் தோன்றியது. ‘ஞால்’ என்பதற்குத் தொங்குதல் என்பது பொருள். எவ்விதப் பற்றுக் கோடுமின்றி அண்டவெளியில் உலகம் தொங்கிக் கொண்டிருப்பதை இ∴து உணர்த்துகிறது.
32. தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை. தீமைசெய்தவருக்கும் நன்மையே செய். உண்மைப் பொருண்மையை உண்டு, காந்தியடிகள் சிறுவனாக இருந்த போது இந்தக் குஜராத்திப் பாடலைக் கேட்டார். இப்பாடல் இன்னா செய்யாமை என்னும் இக்கருத்தை அவருள் விதைத்தது.
33. சத்திய தரும் சாலையில், சாதி, மத வேறுபாடு இன்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார்.
34. தற்போது மேனிலைக் கல்வியில் தேர்ச்சி என்பது பெரும்பாலான பணிகளுக்கும் அடிப்படையாக உள்ளது. எனவே ஒவ்வொருவரும் மேனிலைப் பள்ளிக்கல்வியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

பெ. ஞானசேகர்

அ.உ.நி.ப. பாடந்துறை

# மாதிரி வினாத் தாள்-2

## தமிழ் முதல் தாள்

*(செய்யுள் உரைநடை)*

**இரண்டு மதிப்பெண் விடைகள்:-**

### பகுதி – 1

21. என்னை ஆளாய் உடைய பெருமானே! பக்திப் பரவசத்தால் உடலில் வியர்வை தோன்றிது. உடல்நடுநடுங்கியது. உன் திருவடிகளில் என் கைகளைத் தலைமேல் குவித்து வணங்கினேன். கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. பக்தியால் உள்ளம் வெதும்பியது, பொய்ம்மையைத் தவிர்த்து போற்றி சயசய போற்றி என்று உன்புகழை நாவாரப் பாடும் நிலையிலிருந்து ஒரு போதும் நெகிழேன். என் உண்மை நிலையை அறிந்து என்னை என்று அருள்புரிவாயாக! இவ்வாறு மாணிக்கவாசகர் இறைவனிடம் தம்மை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறார்.

22. கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றவை தேனும் மீனும் ஆகும்

23. திருநாவுக்கரசர், அப்பூதியடிகளிடம் கூறியது.

24. கலம் பகம் - கலம்பகம், கலம்-பன்னிரண்டு, பகம் - பாதி. ஆறு 12 + 6 = 18 உறுப்புகளைக் கொண்டதால் கலம்பகம் எனப்பட்டது. அ∴தாவது புயவகுப்பு, மதங்கு, அம்மானை, குறம், மறம், கார், தவம், சித்து, சம்பிரதம், பாண், களி, இரங்கில், கைக்கிளை, தூது, காலம், வண்டு, தழை, ஊசல் போன்ற பதினெட்டு உறுப்புகளைக் கொண்டது. இனி, கலப்பு + அகம் - (கலம்பகம்) எனப் பிரித்துப் பல்வகை பாவும் பாவினங்களும் கலந்து வரும் நூலாதலின், இ∴து இப்பெயர் பெற்றது என்பர்.

25. 1. பிறர்க்கு பணிதல் நல்வழியில் நடத்தல், மாண்புடைய சான்றோர்களின் அறிவுரைகளைப் பின்பற்றுதல்

    2. நுண்ணறிவு மிக்கநூல்களை ஆராய்தல், அவை கூறும் நெறியில் வாழுதல் ஆகியவை பழியிலா மன்னராய் வாழ்பவனின் பண்புகள் எனக்கனிமேதாவியர் குறிப்பிடுகிறார்

26. போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் அதிவீரராமபாண்டியன் (பிள்ளைப்பாண்டியன்) போலிப்புலவர்களின் செவியை அறுப்பவர் வில்லிபுத்தூரார். போலிப்புலவர்களின் தலையை வெட்டுபவர் ஒட்டக்கூத்தர்.

27. ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிக்கவைப்பது பொருட்செல்வமே தவிர வேறு எந்தப் பொருளும் இல்லை.

பகுதி -2

28. புறநானூறு கூறும் உயர் சிந்தனையான யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது உலக மக்களை ஒன்றிணைத்து உறவுகள் ஆக்கியது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் எனத் திருக்குறள் உலகுக்கு எடுத்துரைக்கிறது. அதுமக்கட் பண்பில்லாதாரைப் பதர் எனப் பழிக்கிறது.

29. ஒரு நிகழ்வை மட்டும் எடுத்துக்கொண்டு அதைப்பற்றி முழுவிளக்கம் தருவது விளக்கப்படமாகும்

30. தமிழர் உணவு, உடை, விருந்தளித்தல், ஈகை, பொறை நடுவுநிலைமை, அருள் ஆகிய பண்புகளால் சிறந்திருந்தனர். பண்டையதமிழர் உழவையும் தொழிலையும் மதித்தனர். ஆடவர் வினையை உயிராய்க்கருதினர்.

31. உலகம் என்னும் தமிழ்ச்சொல் உலவு என்னும் சொல்லின் அடியாய்ப் பிறந்தது. உலவு என்பது சுற்றுதல் என்னும் பொருளைத்தரும். உலகம் தன்னையும் ஞாயிற்றையும் சுற்றி வருகிறது என்னும் அறிவியல் கருத்து இதில் வெளிப்படுவதைக் காணலாம்.

32. மனிதனின் நோக்கம் உயர்ந்ததாயும் தூய்மையானதாயும் இருக்க வேண்டும். அதேபோல் அதனை அடையும் வழிமுறைகளும் தூய்மையானவையாயும் பிறருக்குத்துன்பம் தராதனவாயும் இருத்தல் வேண்டும். மனிதரோடுமனிதராய் வாழ்ந்து, மனிதருக்காய் வாழ்ந்து மகாத்மாவாக உயர முடியும் என்று காந்தியடிகள் மெய்ப்பித்தார்.

33. ஆணும் பெண்ணும் சமம். மக்கள் அனைவரும் சாதி, சமயம், கோத்திரம், குலம், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் வேறுபாடற்றுச் சமரச மனப்பான்மையுடன் மனித நேயத்துடன் வாழவேண்டும் என்று இராமலிங்கர் விரும்பினார்.

34. தற்போது வளர்ந்து வரும் இருதொழில் நுட்பத்துறைகள் உயிர் தொழில் நுட்பத்துறை. 2. நுண்ணியல் தொழில் நுட்பத்துறை ஆகும்.

பெ. ஞானசேகர்

அ.உ.நி.ப. பாடந்துறை

# மாதிரி வினாத் தாள்-3

## தமிழ் முதல் தாள்

*(செய்யுள் உரைநடை)*

**இரண்டு மதிப்பெண் விடைகள்:-**

### பகுதி – 1

21. 1. உயரினும் ஓம்பப் படுவது ஒழுக்கம், 2. ஒருவனுக்கு எல்லாச் சிறப்புகளையும் தருகிறது.
22. பிறர்க்குப் பணிதல் நல்வழியில் நடத்தல், மாண்புடைய சான்றோர்களின் அறிவுரைகளைப் பின்பற்றுதல். நுண்ணறிவு மிக்க நூல்களை ஆராய்தல், அவை கூறும் நெறியில் வாழுதல் ஆகியவை பழியிலா மன்னராய் வாழ்பவனின் பண்புகள் எனக் கணிமேதாவியார் குறிப்பிடுகிறார்.
23. கம்பர் பிறந்த ஊர் சோழ நாட்டுத் தேரழுந்தூர், தந்தை ஆதித்தனர், மரபு உவச்சர் மரபு, ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பவள்ளல். காலம் கி.பி 12ம் நூற்றாண்டு கி.பி 6ஆம் நூற்றாண்டு என்பாரும் உளர். இயற்றிய நூல்கள்: சடகோபர் அந்தாதி, ஏர் எழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம். சரசுவதி அந்தாதி 'கல்வியில் பெரியவன் கம்பன்'. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும் விருத்தம் என்னும் ஒண்பாவுக்கு உயர்கம்பன்" என்னும் தொடர்கள் கம்பரின் பெருமையை விளக்கும்.
24. திங்களுருக்கு வந்த திருநாவுக்கரசர் அப்பூதியடிகள் தாம் வைத்த தண்ணீர்ப் பந்தலுக்கு அவரது பெயரை வைக்காமல் வேறு ஒருவர் (திருநாவுக்கரசர்) பெயரை வைத்தது கண்டு வியந்து அப்பூதியடிகளிடம் இவ்வாறு கேட்டார்.
25. நன்னெறி விதைகள்: (வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம். மாகதம்)
26. சிவபெருமான் எவர்க்கும் ஆட்படாத தன்மையன் சங்கரன் என்னும் நற்பெயரைக் கொண்டவன் வெண்மையான சங்கினாற் செய்யப்பட்டகுழை என்னும் அணியைச் செவிகளில் அணிந்தவன்.
27. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் நாலாயிரத்திவ்ய பிரபந்தம்.

### பகுதி - 2

28. தமிழ்மொழி தனக்கென இலக்கியமும் இலக்கணமும் உடைய மொழி. தனக்கெனத் தனி நோக்கம், போக்கும் உடைய மொழிக் கோட்பாடுகளைத் தன்னுள் இயங்கும் மொழி.

29. திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது. அச்சுருள் எதிர்ச்சுருன் எனப்படும். ஒளிப்பதிவையும் ஒலிப்பதிவையும் தனித்தனிப்படச் சுருளில் அமைப்பர்.

30. உடலில் வாதம், பித்தும் சிலேத்துமம் ஆகிய மூன்றனுள் ஏதேனும் ஒன்று அளவு குறைந்தால் நோய் வரும். (அளவுக்கு அதிகமானாலும் நோய் வரும்) மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வளி முதலா எண்ணிய மூன்று என்று வள்ளுவர் வகுத்துக் கூறுகின்றார்.

31. இயேசுவின் மலைப் பொழிவு பகவத்கீதை, திருக்குறன் ஆகியவற்றைப் படித்தாலும் அரிச்சந்திர நாடகம் பார்த்தாலும் காந்தியடிகளுக்கு உயர்பண்புகள் இளம் பருவத்திலேயே இயல்பாய் அமைந்தன. அவை அன்பு, உண்மை, உறுதி, இன்னாசெய்யாமை என்பனவாகும்.

32. சாதி சமய இன வேறுபாடு கூடாது. எவ்வுயிரையும் கொல்லக்கூடாது. புலால் உண்ணக் கூடாது. எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ண வேண்டும், ஏழையரின் பசியைப் போக்க வேண்டும். உலகமக்களை உடன் பிறப்புகளாய் எண்ண வேண்டும்.

33. தமிழகத்திலிருந்து கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து, சாவகம் போன்ற நாடுகளுக்கு மயில்தோகை, யானைத்தந்தம், வாசனைப்பொருள்கள் அரிசி மயில் சந்தனம் போன்ற பொருள்கள் அனுப்பப்பட்டன.

34. உயிரி – தொழில்நுட்பத்துறை நுண்ணியல் தொழில்நுட்பத்துறை சார்ந்த தொழிற் படிப்புகள் வேலை வாய்ப்புகளை உருவாக்கித்தரும் அமுத சுரபியாக விளங்குகின்றன.

பெ. ஞானசேகர்

அ.உ.நி.ப. பாடந்துறை

# மாதிரி வினாத் தாள்-4

## தமிழ் முதல் தாள்

*(செய்யுள் உரைநடை)*

**இரண்டு மதிப்பெண் விடைகள்:-**

### பகுதி – 1

21. ஊக்கம் உடையவன் அடங்கியிருத்தல், போர் செய்கின்ற ஆட்டுக்கடா பகையைத் தாக்கக் கருதிப் பின்வாங்குவதைப் போன்றதாகும்.
22. முதற்பாவலர், பொய்யில் புலவர், தெய்வப்புலவர், பெருநாவலர், செந்நாப் போதார்
23. இராம பிரானுக்கு நேர்ந்துள்ள நிலைமையை நோக்கி, அவரைப் பிரிந்து தன் ஊருக்குச் செல்லக் குகன் மனம் இசையவில்லை. எனவே அவன் தன்னால் இயன்ற தொண்டினை அவருக்குச் செய்து கொண்டு அவரோடு அங்கேயே இருக்கத் தன்னை அனுமதிக்குமாறு குகன் வேண்டுகோள்விடுக்கிறான்.
24. அப்பூதியடிகள் களவு, பொய், காமம், சினம், முதலிய குற்றங்கள் நீங்கியவர். வளமான வாழ்க்கையினையுடைய மனையறம் காப்பவர்.
25. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா நால்வகைப் பாக்கள் ஆகும்.
26. கடிந்து அறிவுரை கூறும் பெரியாரின் துணையில்லாத காவலற்ற அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர் இல்லாமலே தான் கெட்டழிவான்.
27. அறிவு என்று சொல்லப் படுவது, அறிவற்றவர் கூறும் சொற்களைப் பொறுத்துக் கொள்ளுதலாகும்.
28. மாதிரி வினாத்தாள் - 2 வினா எண் 28 பார்க்கவும்)

### பகுதி - 2

29. கல்வி கற்பதற்குப் பயன்படும் திரைப் படங்களைக் கல்விப் படங்கள் என்பர். கல்விப் படங்கள் வாயிலாகப் பல்வகை விலங்குகளின் வாழ்க்கை, பன்னாட்டு மக்களின் வாழ்க்கை, நேரில் காணா முடியாத பல இடங்கள் ஆகியவற்றைப் பற்றிக் கண்டு தெரிந்து கொள்ள முடிகிறது.
30. இயலிசை நாடக கலைஞர்கள் பாணன், பாடினி, கூத்தன், விறலி ஆகியோர் ஆவர்.
31. அணு பற்றிய கம்பரின் கருத்து:- ஓர் அணுவினைச் சத கூறிட்ட கோனினும் உளன் என்று கூறினார்.
32. இந்தியாவின் வாழ்வு என்பது இலட்சக்கணக்கான கிராமங்களின் வாழ்வு தான். அந்த கிராமங்களின் வாழ்வு அந்த நாட்டின் உழவர்களின் இளைஞர்க்ள

ஆகியோர் கைகளில் தான் உள்ளது என்று காந்தியடிகள் இந்தியாவின் வாழ்வு குறித்துக் கூறியுள்ளார்.

33. இராமலிங்கர் மருதூரில் 05.10.1823 ல் பிறந்தார்.

34. 1. உயிர் தொழில் நுட்பத்துறை 2. நுண்ணியல் தொழில் நுட்பத்துறை ஆகிய இரண்டும் இக்காலக் கட்டத்தில் வளர்ந்துவரும் தொழில் நுட்பத்துறைகளாகும்.

பெ. ஞானசேகர்

அ.உ.நி.ப. பாடந்துறை

# மாதிரி வினாத் தாள்-5

## தமிழ் முதல் தாள்

*(செய்யுள் உரைநடை)*

**இரண்டு மதிப்பெண் விடைகள்:-**

### பகுதி – 1

21. உயர்ந்த சான்றோரின் அறிவுரைகளைத் தழுவி நடவாதவர். நூல் பல கற்றிருந்தாலும் அவர் அறிவற்றவர் ஆவர்
22. காலம் வாய்க்காத போது தன் கருத்தை வெளிப்படுத்தக் கூடாது. காலம் வாய்த்த போது அதனை நழுவ விடக்கூடாது. காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டும்.
23. 1. தேனையும் செம்மைப் படுத்தப் பட்ட மீனையும் குகன் இராமனுக்குக் கையுறைப் பொருளாகக் கொண்டு சென்றான்.
24. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் நீர்வைத்துள்ள தண்ணீர்ப் பந்தலின் முகப்பில் உம்பெயரை எழுதாமல் வேறொருவர் பெயரை எழுதி வைத்துள்ளமைக்கு என்ன காரணம்? என்று கேட்டார்.
25. (மாதிரி வினா 1ல் 23ம் எண்ணில் விடை)
26. தாமரை மலர் போன்ற நந்திவர்மனின் திருவடிகளைப் பணிந்து திறை செலுத்தாது. அவனை எதிர்த்த அறிவற்ற மன்னர், போரில் தம் உயிரை இழந்து தேவர் உலகத்தை ஆள்வர் என்று நந்திவர்மன் வீரம் சிறப்பித்துக் கூறப் பட்டுள்ளது.
27. ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிக்கவைப்பது பொருட்செல்வமே தவிர வேறு எந்தப் பொருளும் இல்லை.
28. ஏறத்தாழ ஆறாயிரத்திற்கு மேற்பட்ட மொழிகள் உலகில் உள்ளன. அவற்றுள்ளும் இலக்கிய இலக்கண வளமுடைய மொழிகள் மூவாயிரம் ஆகும்.
29. கருத்துப் படம் அமைக்கத் தொடங்கியவர் வால்ட் டிஸ்னி ஆவார்.
30. ‘‘மனித நாகரிகம் வளர்ந்த தொட்டில்’’ என்று குறிப்பிடப்படும் இலெமூரியாக் கண்டம். அந்தப் பகுதி இன்றுள்ள குமரி முனைக்கு இன்னும் தெற்கே விரிந்து குமரிமலை, குமரியாறு, பஃறுளி ஆறு முதலிவற்றை உள்ளடக்கி இருந்தது. இவை கொடுங்கடலால் கொள்ளப்பட்ட பகுதிகளாகும்.
31. சிலப்பதிகாரம் பல்வகை மணிகளையும், அவற்றின் தன்மைகளையும் விளக்குகிறது.

‘‘ஊர்காண் காதையில் வரும்
ஒருமைத் தோற்றத்து ஐவேறு வனப்பின்
இலங்குகதிர் விடுஉம் நலங்கெழு மணிகளும்’’

எனும் இவ்வடிகள் ஆழ்ந்த பொருளுடையன. ஐவகை மணிகளும் ஒளிவிடும் திறத்தினால் வெவ்வேறு பெயர்களைக் கொண்டுள்ளன.

32. (மாதிரி வினாத்தாள்-2. 31 வினாவிற்கான விடையைப் பார்க்கவும்.)

33. (மாதிரி வினாத்தாள்-3. 33 வினாவிற்கான விடையைப் பார்க்கவும்.)

34. (மாதிரி வினாத்தாள்-1. 34 வினாவிற்கான விடையைப் பார்க்கவும்.)

பெ. ஞானசேகர்

அ.உ.நி.ப. பாடந்துறை

# மாதிரி வினாத் தாள்-1

## தமிழ் இரண்டாம் தாள்

*(இலக்கணம்)*

**இரண்டு மதிப்பெண் விடைகள்:-**

**பிரிவு – 2**

21. பெறு(பெற்று) + ஏன்

பெறு – பகுதி, ஒன்று இரட்டித்து வந்து இறந்த காலம் காட்டியது.

ஏன் - தன்மை வினைமுற்று விகுதி.

22.

| அடுக்குத்தொடர் | இரட்டைக் கிளவி |
|---|---|
| சொற்கள் தனித்தனியே நிற்கும் | சொற்கள் ஒன்றுபட்டு நிற்கும் |
| இரண்டு, மூன்று நான்கு முறை அடுக்கி வரும் | எப்போதும் இரட்டைச் சொற்களாகவே இருக்கும் |
| பிரித்தால் பொருள் தரும் | பிரித்தால் பொருள் தராது |
| விரைவு, அச்சம், வெகுளி, உவகை, முதலிய பொருள்களை உணர்த்தி வரும் | வினைக்கு அடைமொழியாய்க் குறிப்புப் பொருள் உணர்த்தி வரும் |

23. இந்திரன், ஊரன், உழவர், செந்நெல், எருமைநீர்நாய், தாமரை, காஞ்சி, மருதம்

24. எயில்காத்தல் நொச்சி, அதற்கு எதிரான திணை உழிஞைத்திணை உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் மாற்றரசன் கோட்டைக்குள் புகுந்து மதிலைக் கைப்பற்றுதல் உழிஞைத்திணை.

25. ஆய்த எழுத்து தனக்குரிய அரைமாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் குறுகி ஒலிக்கும். அ∴து ஆய்தக்குறுக்கம் எனப்படும். (எ.கா) முள் + தீது = மு∴டீது

26. விடை எட்டு வகைப்படும்: அவையாவன 1. சுட்டுவிடை 2. மறைவிடை 3. நேர்விடை 4. ஏவல்விடை 5. வினா எதிர்வினாதல்விடை 6. உற்றதுரைத்தல்விடை 7.உறுவது கூறல் விடை 8. இனமொழிவிடை

27. செம்மை + மொழி ஈறுபோதல் என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்று மை கெட்டுச் செம் + மொழி ஸ்ரீ செம்மொழி என்று புணர்ந்தது.

பெ. ஞானசேகர்

அ.உ.நி.ப. பாடந்துறை

# மாதிரி வினாத் தாள்-2

## தமிழ் இரண்டாம் தாள்

*(இலக்கணம்)*

**இரண்டு மதிப்பெண் விடைகள்:-**

**பிரிவு – 2**

21. வாழ் + வ் + ஆன்

வாழ் - பகுதி

வ் - எதிர்கால இடைநிலை

ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

22. ம் என்னும் மெய்யெழுத்து தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலித்தல் மகரக்குறுக்கம் எனப்படும். (எ.கா) வரும் + வண்டி – வரும்வண்டி, ம் தன் அரைமாத்திரையிலிருந்து குறைந்து கால் மாத்திரையாக ஒலிக்கும்.

23. முருகன், குறவர், குறத்தியர், மலைநெல், திணை, புலி, கரடி

24. நிரைகவர்தல் வெட்சித்திணை. அதற்கு எதிரான திணை கரந்தைத் திணை ஆகும். வெட்சி வீரர்களால் கவர்ந்து செல்லப்பட்டதம் ஆநிரைகளைக் கரந்தைப் பூவைச் சூடிச்சென்று மீட்பது கரந்தைத்திணை.

25. (மாதிரி வினாத்தாள் 1ல். 22 வினாவிற்கான விடையை காண்க)

26. வினா ஆறுவகைப்படும். அவையாவள 1. அறிவினா 2. அறியாவினா 3. ஐயவினா 4. கொளல்வினா 5. கொடைவினா 6. ஏவல்வினா

27. ஆசிரியப்பா நான்குவகைப்படும் அவையாவன 1. நேரிசை ஆசிரியப்பா 2. இணைக்குறள் ஆசிரியப்பா 3. நிலை மண்டில ஆசிரியப்பா 4. அடிமறிமண்டில ஆசிரியப்பா

பெ. ஞானசேகர்

அ.உ.நி.ப. பாடந்துறை

# மாதிரி வினாத் தாள்-3

## தமிழ் இரண்டாம் தாள்

*(இலக்கணம்)*

**இரண்டு மதிப்பெண் விடைகள்:-**

**பிரிவு – 2**

21. அறி ு த் (ந்) + த் + உ

   அறி - பகுதி

   த் - சந்தி

   ந் - ஆனது விகாரம்

   த் - இறந்தகால இடைநிலை

   உ - வினையெச்ச விகுதி

22. (மாதிரி வினாத்தாள் 1ல் 25வது வினாவிற்கான விடையை காண்க)

23. திருமால், ஆயர் ஆய்ச்சியர், வரகு, சாமை, முயல், மான்.

24. ஒரே சொல் முன்பின் சேர்ந்து வரும் சொல்லின் குறிப்பால் ஆண் பாலையோ பெண்பாலையோ உயர்த்திவருவது ஒன்றொழி பொதுச்சொல் எனப்படும். (எ.கா: இம்மாடு வயலில் உழுகிறது. 2. இம்மாடு பால்கறக்கிறது முதல் தொடரில் வந்துள்ள மாடு என்னும் பொதுச்சொல் உழுதது என்னும் குறிப்பால் காளைமாட்டைக் குறிக்கிறது. இரண்டாவது தொடரில் வரும் மாடு என்னும் பொதுச்சொல் கறக்கிறது என்னும் சொல்லால் பசுமாட்டைக்குறிக்கிறது.)

25. இது செய்வாயா? என்று வினவிய போது உடம்பு நொந்தது என்று தனக்கு உற்றதை விடையாகக் கூறுவது உறுவது கூறல்விடை ஆகும்.

26. பகைவேந்தர் இருவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டுதம் வீரர்களுடன் போரிடுவது தும்பைத்திணை. இவ்வீரர்கள் தும்பைப் பூவைச்சூடிப் போரிடுவர். வெற்றிபெற்ற மன்னன் வாகைப் பூச்சூடி மகிழ்வது வாகைத் திணையாகும்.

27. ஈற்றயலடி முச்சீராயும் பிற அடிகள் நாற்சீராயும், ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்றும் வருவது நேரிசை ஆசிரியப்பா.

பெ. ஞானசேகர்

அ.உ.நி.ப. பாடந்துறை

# மாதிரி வினாத் தாள்-4

## தமிழ் இரண்டாம் தாள்

*(இலக்கணம்)*

**இரண்டு மதிப்பெண் விடைகள்:-**

**பிரிவு – 2**

21. எய்துவர் : எய்து + வ் + அர்

எய்து - பகுதி

வ் - எதிர்கால இடைநிலை

அர் - படர்க்கை பலர்பால் வினைமுற்றுவிகுதி

22. ஒரு சொல் தன் பொருளையும் குறித்து தனக்கு இனமான பொருளையும் குறித்து வருவது. எ.கா. வெற்றிலை தின்றான்

23. (மாதிரி வினாத்தாள்-1. 23 வினாவிற்கான விடையைப் பார்க்கவும்.)

24. (மாதிரி வினாத்தாள்-1. 24 வினாவிற்கான விடையைப் பார்க்கவும்.)

25. ஔகாரம் சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும். ஒன்றரை மாத்திரை அளவினதாய் குறைந்து ஒலிக்கும். எ.கா. ஔவை, வௌவால்

26. தான் ஒருபொருளை நன்கறிந்திருந்தும் அப்பொருள் பிறர்க்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினாவப்படும் வினா அறிவினா. திருக்குறளை இயற்றியவர் யார்? என ஆசிரியர் மாணவனிடம் கேட்டது தான் அறியாத ஒரு பொருளை அறிந்து கொள்வதற்காகப் பிறரிடம் வினவுவது அறியாவினா. எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றியன எவை? என மாணவன் ஆசிரியரிடம் வினவுவது.

27. பா நான்கு வகைப்படும்! அவையாவன! 1. வெண்பா 2. ஆசிரியப்பா 3. கலிப்பா 4. வஞ்சிப்பா

பெ. ஞானசேகர்

அ.உ.நி.ப. பாடந்துறை

# மாதிரி வினாத் தாள்-5

## <u>தமிழ் இரண்டாம் தாள்</u>

*<u>(இலக்கணம்)</u>*

**இரண்டு மதிப்பெண் விடைகள்:-**

**பிரிவு – 2**

21. நிறைந்த – நிறை + த்(ந்) + த் + அ

    நிறை – பகுதி

    த் - சந்தி

    ந் - ஆனது விகாரம்

    த் - இறந்த கால இடைநிலை

    அ - பெயரெச்ச விகுதி

22. செம்மை, சிறுமை, நன்மை, இளமை
23. (மாதிரி வினாத்தாள்-3. 23 வினாவிற்கான விடையைப் பார்க்கவும்.)
24. வெற்றி பெற்ற மன்னன் வாகைப் பூவைச் சூடி மகிழ்வது வாகைத் திணை.
25. வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று இரண்டு அடிகளைக் கொண்டதாய் ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் வருவது குறள் வெண்பா.
26. (மாதிரி வினாத்தாள்-2. 26 வினாவிற்கான விடையைப் பார்க்கவும்.)
27. அடுக்குத் தொடர் இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வருவதாகும். எ.கா (வாழ்க! வாழ்க) பாம்பு, பாம்பு வருக வருக

பெ. ஞானசேகர்

அ.உ.நி.ப. பாடந்துறை